**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 513/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **மாதேஷ்வரன் (தலைமை காவலர் )** |
| Father’s / Husband Name | : | துரைசாமி |
| Address | : | மதுவிலக்கு அமலாக்க பிரிவு பெரம்பலூர் |
| Age | : | 48/2026 |

**தேதி : 11.02.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மதுவிலக்கு அமலாக்க பிரிவு பெரம்பலூரில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.02.2025ம் தேதி அன்று மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் உதவி ஆய்வாளர் வினோத்கண்ணன் என்பவருடன் தலைமை காவலர் செல்வராஜ் 1882 ஆகியோர்களுடன் மது சம்மந்தமாக கோவில்பாளையம் கிராமத்தில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்போது காவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி கோவில்பாளையம் கிராமத்தில் காலை 10.00 மணிக்கு சோதனை செய்தபோது ஒரு பெண் நபர் எங்களை கண்டதும் தப்பிக்கு முயற்சிசெய்தார். அவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறி அவருடைய பெயர் ரேவதி த/பெ. ராமசாமி என்று கூறினார். இவ்வழக்கின் எதிரிதான் அவர். கையில் வைத்திருந்த பையை வாங்கி காவல் உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது அந்த பையில் 180 m.l. அளவுள்ள Express பிராந்தி பாட்டில்கள் 30.

அரசு மதுபான கடை மூடிய பிறகு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி வைத்திருந்ததாக சொன்னார். பின்பு 10.00 மணிக்கு எதிரியை கைது செய்து 10.10 மணிக்கு எதிரியின் உறவினருக்கு கைது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரை காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். மதுபாட்டில்களை திறந்து மதுவை கீழே கொட்டி அழித்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசரை காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசரில் நானும், தலைமை காவலர் சக்திவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசருடன் கூடிய அழித்தல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரியை 13.00 மணிக்கு காவல் நிலையம் அழைத்துவந்து காவல் நிலைய குற்ற எண். 25/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன்படி முதல் தகவல்அறிக்கையை காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over / interpreted to the witness in the presence of the accused / accused/ pleader and admitted by the witness to be correct

Sd/-.

Judicial Magistrate No.1(FAC)
Perambalur.